**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

## CC.No.271/2023

PW-1

| | | | |
|---|---|---|---|
| Name | யுகேஷ்குமார்(PW1) | | |
| Father's Name | ஜெயமாணிக்கம் | தொழில் | VAO |
| Village | காணூர் | | |
| Taluk | அவிநாசி | Age | 35 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th **day of June 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் தற்போது அவிநாசி தாலுகா காணூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02/10/2022 ம் தேதி நான் கருவலூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த பொழுது காலை 6:30 மணி அளவில் கருவலூரில் வசிக்கும் பரமசிவம் என்பவர் முந்தைய தினம் இரவு 11:30 மணி அளவில் அனந்தகிரி ஆப்பிள் ரெஸ்டாரன்ட் அருகே ஒரு வாகன விபத்து ஏற்பட்டு விட்டதாகவும் அதில் அடையாளம் தெரியாத ஒரு நபருக்கு அடிபட்டு விட்டதாகவும் ஆம்புலன்ஸ் அவரை ஏற்றி சென்றதாகவும் தகவல் சொன்னார். நான் உடனடியாக அவிநாசி காவல் நிலையம் சென்று விபத்து பற்றி புகார் எழுதிக் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகார் (அ.சா.ஆ.1) ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

பரமசிவம் என்பவர் என்னிடம் இரவு நடந்த விபத்து பற்றி சொன்னார். அந்த ரெஸ்டாரண்டை பரவசிவம் நடத்தவில்லை. பரமசிவம் விவசாயம் செய்து வருகிறார். பரமசிவம் சம்பவத்தை நேரில் பார்த்ததாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இந்த விபத்தில் இறந்து போன நபரின் விபரத்தை பற்றி புகார் முன்பும் புகார் பின்பும் விசாரித்து தெரிந்து கொள்ள வில்லை என்றால் சரிதான். விபத்து சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். புகாருக்கு பின்பும் இறந்து போன நபரை நான் சென்று பார்க்கவில்லை.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| <br><br><br><br><br><br>**சாட்சியின் கையொப்பம்** | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |